<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 17.02.2026

அசல் வழக்கு எண். 326/2018

வா.சா.2 – துரை , த/பெ. முனுசாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கு போட்டவர் சொந்தக்காரரா என்றால் பக்கத்து தெருக்காரர். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சண்டை போட்டு கேஸ் கொடுத்தார் ஆகவே வழக்கு தாக்கல் செய்தார். வாக்குமூலத்தில் என்ன போட்டு உள்ளீர்கள் தெரியுமா என்றால் படிக்கத் தெரியாது. வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. ராஜு என்பவருக்கு பட்டா கொடுத்ததாக சொல்லி உள்ளீர்கள் எந்த ஆண்டு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு அளவுக்கு கொடுத்தார்கள் என்றால் தெரியாது. 3 சென்ட்க்கு பட்டா கொடுக்கபட்டது என்றால் சரிதான். வையாபுரி தெரியுமா என்றால் தெரியும். அவர் சொல்லி தான் சாட்சி சொல்ல வந்தீர்கள் என்றால் சரிதான். ராஜிக்கு உண்டான இடத்தில் தான் வையாபுரி வீடு கட்டி உள்ளார் என்றால் சரிதான் நடராஜன் தெரியுமா என்றால் தெரியும். வீடு கட்டி 20 வருடம் இருக்குமா என்றால் இருக்கும். ஆண்டாள் அம்மாள் இடம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக கொடுத்தார்கள் என்றால் தெரியாது. சுமார் 20 வருடம் அல்லது 30 வருடம் இருக்குமா என்றால் இருக்கும். ஆண்டாள் அம்மாள் வீடு கொடுக்கவில்லை வையாபுரி அழைத்ததற்காக சாட்சி சொல்ல வந்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.